பக்கங்கள் 19+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 30 புதன்கிழமை 14.01.2026 | அதிர்வு 168

## மின்சாரம் தாக்கி தம்பதி மரணம்!

காணி ஒன்றில் மின்சார வேலியில் சிக்கி கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் துயரச் சம்பவம் கேகாலை, வரக்காபொல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹனுவல பகுதியில் நெரூர் 04▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# திருமலை புத்தர் சிலை வழக்கில் இன்று 4 பிக்குகள் உட்பட 9 பேருக்கு மறியல்!

## நீதிமன்றம் அதிரடி உத்தரவு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை கடற்கரையில் அனுமதியற்ற பௌத்த மத ரீதியான கட்டுமானங்களை அமைத்து, அதில் புதிதாக புத்தர் சிலை ஒன்றை வைத்தமை தொடர்பில் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் பாதுகாப்பு திணைக்களத்தால் தொடரப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பலாங்கொட வனவாசி கசியப்ப தேரர் உட்பட நான்கு தேரர்கள் மற்றும் ஐந்து பொதுமக்களை இன்று திருகோணமலை நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுடீன் எதிர்வரும் 19 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். 04▶



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# யாழில் சூடுபிடித்துள்ள தைப்பொங்கல் வியாபாரம்




தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு யாழ்ப்பாணம் – திருநெல்வேலி சந்தியில் வியாபார நடவடிக்கைகள் சூடுபிடித்துள்ளன.
(படங்கள்:– எஸ்.நிதர்ஷன்)


















# வவுனியாவில் களைகட்டிய தைப்பொங்கல் வியாபாரம்

(கி.வசந்தன்)

உழவர் திருநாளான தைப்பொங்கல் தினத்தைக் கொண்டாடுவதற்கு மக்கள் தயாராகி வருவதுடன், வவுனியாவில் பொங்கல் வியாபாரம் களைகட்டியுள்ளது.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற வாக்குக்கிணங்க, நாளை வியாழக்கிழமை, உழவர் திருநாளான தைப்பொங்கலை மக்கள் சிறப்பாகக் கொண்டாடவுள்ளனர்.

இந்தநிலையில், வவுனியாவில் தைப்பொங்கல் பண்டிகையின் வியாபாரம் தற்போது மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது.

வவுனியா நகரில் அதிக சன நெரிசல் காணப்படுவதுடன், பொங்கலுக்கு தேவையான பானை, அகப்பை, கரும்பு, பட்டாசு, பழ வகைகள் போன்ற பொருட்களின் விற்பனை அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்தை விட, இம்முறை மக்கள் அதிக ஆர்வத்துடன் பொங்கல் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று வவுனியா வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.













# இந்தியாவில் இருந்து புறாக்களைக் கடத்தி வந்த நெடுந்தீவைச் சேர்ந்த 3 இளைஞர்கள் சிக்கினர்!









(எஸ்.நிதர்ஷன்)

இந்தியாவில் இருந்து புறாக்களை கடத்தி, நெடுந்தீவுக்குப் படகில் கொண்டு வந்த நெடுந்தீவைச் சேர்ந்த மூன்று இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த இளைஞர்கள் இந்தியாவிலிருந்து புறாக்களை அடைத்து, அவற்றை நெடுந்தீவுக்குக் கடத்தி வந்த நிலையில், நெடுந்தீவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், அவர்கள் கடத்தி வந்த புறாக்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களை நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### திருமலை புத்தர்...

கடந்த நவம்பர் மாதம் கரையோரப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை மீறி கடற்கரையில் கட்டுமானத்தை அமைத்தமை மற்றும் சிலையை வைத்தமை தொடர்பில் வனவாசி பலங்கொட கசியப்ப தேரர், திருகோணமலை கோட்டை விகாராதிபதி கல்ஞான வன்ச திஸ்ஸ தேரர், சுகித்த வன்ச தேரர். சிறிமாபுர விகாரையைச் சேர்ந்த நந்த தேரர் ஆகிய தேரர்களுக்கும், கோட்டை விகாரையின் நிர்வாகக் குழு உறுப்பினர்களான தீபானி லியனகே, விதுரங்க லொக்கு கலப்பதி, எல்.ரீ.பெரேரா, பியலால் பிறேமசிறி, தெக்கும் துலார குணதிலக்க ஆகியோருக்கும் விளக்கமறியல் விதிக்கப்பட்டது.

இதனையடுத்து இவர்கள் அனைவரும் திருகோணமலை விளக்கமறியல் சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

சுதிப்ப லியனகே,சுகத் பிரசன்ன ஆகிய மேலும் இருவர் எதிரிகளாக பெயரிடப்பட்டிருந்தனர். அவர்கள் இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகி இருக்கவில்லை. இவர்கள் இருவர் தொடர்பில் எதிர்வரும் 19 ஆம் திகதி தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்டத்தரணி ஒருவரும், பொலிஸ் திணைக்களத்தின் சார்பில் சட்டத்தரணி ஒருவரும் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

கரையோரப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பிணை வழங்கும் அதிகாரம் நீதிவான் நீதிமன்றத்துக்கு இல்லை. மேல்நீதிமன்றத்துக்கு மட்டுமே பிணை வழங்கும் அதிகாரம் உள்ளது. இதனால் இன்று எதிராளிகளைப் பிணையில் விடுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதும் பிணை வழங்கப்படவில்லை.

சர்ச்சைக்குரிய இடத்தில் மேசை ஒன்றின் மீது புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. அதைச் சுற்றி நான்கு தூண்கள் நிறுத்தப்பட்டு, அவற்றின் மீது அஸ்பெஸ்டேட் சீற் போடப்பட்டு ஒரு கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் கொட்டகையே கரையோரப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தை மீறி அமைக்கப்பட்டதாக இன்றைய வழக்கில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

மேசையில் வைக்கப்பட்ட சிலை அல்ல, அந்தக் கொட்டகையை அகற்றுவது தொடர்பான ஏற்பாட்டுக்கு இணங்காத நிலையிலேயே எதிராளிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள். அந்தக் கொட்டகையை இன்று உடனடியாக அகற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்றும் அறியவந்தது.

### மின்சாரம் தாக்கி...

செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக காணியில் பொருத்தப்பட்ட மின்சார வேலியில் சிக்கியே கணவனும் மனைவியும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

/ஹனுவல, துல்ஹிரிய பகுதியைச் சேர்ந்த 60 வயதுடைய கணவனும், 58 வயதுடைய மனைவியுமே உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 34 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வரக்காபொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாகர்கோவிலில் பெண் கைது! பொதுமக்கள் சிலர் முறுகல்!!

## பொலிஸின் சோதனைக்குக் கடும் எதிர்ப்பு 9 கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன

**(மரியசீலன் திலைக்ஸ்)**

யாழ். வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் பகுதியில் ஒரு பெண்ணைக் கைது செய்வதற்குச் சென்ற பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினருடன் பொதுமக்கள் சிலர் முறுகலில் ஈடுபட்டனர்.

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பெண் ஒருவரைக் கைது செய்வதற்காக மருதங்கேணி பொலிஸார் விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து, நாகர்கோவில் பகுதியில் அமைந்துள்ள அந்தப் பெண்ணின் வீட்டை திடீர் சுற்றிவளைப்பு செய்தனர்.

அப்போது, அந்தப் பெண்ணைக் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்ற பொலிஸார், குறித்த வீட்டின் வளாகத்தை மோப்ப நாய் கொண்டு பலத்த சோதனை செய்தனர்.

இந்தச் சோதனையின் போது, “பொலிஸார் அத்துமீறி எங்கள் வீட்டைச் சோதனையிடுகின்றனர்” என்று கூறி, பொதுமக்கள் சிலர் முறுகலில் ஈடுபட்டனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

தொடர்ந்து, பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் அந்தப் பகுதியில் மேலும் சோதனைகள் மேற்கொண்டனர்.

இன்று அதிகாலை, அதே பகுதியில் 9 கஞ்சா பொதிகளை விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டாலும், யாரும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.













# யாழில் அருண் சித்தார்த்தின் அலுவலகத்துக்குத் தீ வைப்பு

## தடயவியல் பொலிஸார் விசாரணை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் கட்சி அலுவலகம் ஒன்று அமைந்துள்ள கடைத்தொகுதிக்கு இனந்தெரியாத நபர்கள் தீ வைத்த சம்பவம் தொடர்பில் தடயவியல் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தாவடி பகுதியில் அமைந்துள்ள கட்சி அலுவலகம் அமைந்துள்ள இரண்டு கடைகளைக் கொண்ட கடைத்தொகுதிக்கு இன்று அதிகாலை வேளை தீ வைக்கப்பட்டுள்ளது.

இரு நபர்கள் கதவுக்கு தீ மூட்டி விட்டுத் தப்பிச் செல்வது அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமராக்களில் பதிவாகியுள்ளது.

பூட்டப்பட்டிருந்த இரும்புக் கதவுகளுக்கே தீ வைக்கப்பட்டமையால் பெரியளவிலான சேதங்கள் ஏற்படவில்லை.

இந்தக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரான அருண் சித்தார்த் என்பவர் கட்சி அலுவலகத்தை நடத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.








நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நீலிக் கண்ணீர்

நீரில் மூழ்கி உயிருக்குத் தத்தளிப்பவன் ஒரு சிறு துரும்பு கிடைத்தாலும் அதைப் பற்றிப் பிடித்தேனும் தப்பிப் பிழைக்க - கரையேற - முடியாதா என்று முயற்சிப்பான்.

அதுபோல, அரசியலில் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் சிறிலங்கா பொதுஜன பெரமுன (மொட்டுக் கட்சி) தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ அரசியல் அந்தகாரத்தில் அடிபட்டுப் போகாமல் தப்பி பிழைப்பதற்காக ஏதேனும் துரும்பு தன்னும் கிடைக்காத என்று அலைகிறார் போலும். கிடைத்த வாய்ப்புகளை எல்லாம் பற்றிக் கொண்டு அரசாங்கத்துக்கு எதிராகக் குமுறி எழுந்து நிற்க முயலுகின்றார் அவர்.

அந்த வகையில் அமைச்சர் லால் காந்தாவுக்கு எதிரான விவகாரத்தைப் பயன்படுத்தி பௌத்த மகா சங்கத்தினரை அரசுக்கு எதிராகத் தூண்டிவிட அவர் பகீரதப் பிரயத்தனம் பண்ணுகிறார்.

மிஹிந்தலை ரஜமஹா விகாராதிபதி வணக்கத்திற்குரிய வலவாஹெங்குனவெவே தம்மரதன தேரர். பிரதமரும் கல்வி அமைச்சருமான காலாநிதி ஹரிணி அமரசூரிய கொண்டு வந்த கல்விச்சீர்திருத்தத்தை, அதை ஒட்டி இடம்பெற்ற சில விடயங்களை மோசமாக விமர்சித்திருந்தார் இந்த தேரர்.

விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரும் ஜே.வி.பியின் தொழிற்சங்கத் தலைவருமான கே.டி. லால்காந்த இதனால் சீற்றம் கொண்டு பொது மேடையில் அந்த பிக்குவைச் சுட்டும் விதத்தில் 'மிஹிந்தலை காட்டுமிராண்டி' என்ற சொல்லாடலால் அவமதித்துவிட்டார் எனக் கூறப்படுகின்றது.

இதுவே மிக வாய்ப்பான சந்தர்ப்பம் என்று கருதி, இதனைப் பிடித்துக் கொண்டு அரசாங்கத்தையும் மகா சங்கத்தையும் கொழுவி விடும் கைங்கரியத்தை எதிர்க்கட்சிகள் முழு முனைப்பாக ஆரம்பித்திருக்கின்றன.

இந்தக் கூற்று மூலம் 2007ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (ICCPR) சட்டத்தை மீறி பௌத்த மதத்தையும் மகா சங்கத்தினரையும் அமைச்சர் லால் காந்தா அவமதித்துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டத்தில், "யாரும் போரைப் பரப்புவதோ அல்லது பாகுபாடு, பகைமை அல்லது வன்முறையைத் தூண்டும் வகையில் தேசிய, இன அல்லது மத வெறுப்பைத் தூண்டுவதோ கூடாது" எனக் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், லால் காந்த இதில் மதத் துவேஷத்தைப் பரப்பியிருக்கின்றமை புலப்படுவதாக நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டுகின்றார்.

சட்டம் அனைவருக்கும் சமம் என்றால், பௌத்த தலைவர்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் அவதூறுகள் மற்றும் மதத் துவேஷத்தைப் பரப்புவது தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் லால்காந்தவுக்கு எதிராக எடுக்கப்படும் சட்ட நடவடிக்கை என்ன என்று தான் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்புகிறார் எனவும் அவர் கூறியுள்ளார்.

சாதாரண பிரஜை ஒருவரோ அல்லது எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவரோ இவ்வாறு சட்டத்தை மீறியிருந்தால் இந்நேரம் கைது செய்யப்பட்டு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் என்றும், லால்காந்த மதத் துவேஷத்தைப் பரப்பியமை மற்றும் மகா சங்கத்தினரை அவமதித்தமை குறித்து அரசாங்கம் மௌனம் காப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசியல்வாதிகளுக்கும் மகா சங்கத்தினருக்கும் இடையில் பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும், இந்நாட்டு வரலாற்றில் எந்தவொரு அரசியல்வாதியும் இந்த வகையில் மகா சங்கத்தினரை அவமதித்தது இல்லை என நாமல் ராஜபக்ஷ நீலிக் கண்ணீர் வடிக்கின்றார்.

அரசையும் மகா சங்கத்தையும் முரண்பட வைக்கும் எதிரணியின் சாணக்கியம் வேலை செய்யத் தொடங்கியிருப்பதாகவே தெரிகின்றது.

# சட்டவிரோத வடிசாராயம் விற்போர் சமூகத்தில் வாழத் தகுதியற்றவர்கள்!

## மண்முனை மேற்கு பிரதேச சபை தவிசாளர் கோபாலப்பிள்ளை தெரிவிப்பு

(வவுணதீவு நிருபர்)

சட்டவிரோத வடிசாராயம் எமது சமூகத்துக்கு வேண்டாத ஒன்று. இதனை விற்பனை செய்பவர்கள் எமது சமூகத்துக்கு விசத்தை வழங்குவதற்கு நிகராக செயற்பட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு – மண்முனை மேற்கு பிரதேச சபை தவிசாளர் தம்பிப்பிள்ளை கோபாலப்பிள்ளை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேசத்தின் இடம் பெற்ற போதைப் பொருள் தடுப்பு விழிப்பூட்டலில் போது அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

எமது பிரதேசத்தில் தொழில் எதுவும் இல்லை என்று எவரும் கூற முடியாது. இந்தப் பிரதேசத்தில் வடிசாராயம் விற்பனை செய்துவரும் ஒரு சிலரால் இங்குள்ள அனைவருக்கும் கெட்ட பெயர் ஏற்படுகின்றது.

பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தண்டம் பணம் செலுத்தினாலும் அவர்கள் மீண்டும் மீண்டும் அந்த தொழிலைத்தான் செய்கின்றார்கள். இவர்கள் இந்த வடிசாராயம் விற்பனை ஊடாக எமது சமூகத்துக்கு விசத்தை வழங்கி வருகின்றனர். இதன் மூலம் எதிர்கால சந்ததியை அழிக்கின்றனர்.



இந்த அரசு சட்டவிரோத போதைப் பொருள் தடுப்பு விடயத்தில் சிறப்பாக செயற்பட்டு வருகிறது.அதே போல் இந்த போதைப் பொருள்களை விற்பனை செய்பவர்களுக்கான தண்டனைகள் அதிகரிக்கப்பட வேண்டும். அதற்கான புதிய சட்டங்களை கொண்டு வரப்பட வேண்டும்.

எமது பிரதேசத்தில் பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் உள்ள சில கிராமங்களில் நீண்ட காலமாக ஒரு சிலர் இந்த சட்டவிரோத நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

பல முறை மன்னிப்பு வழங்கியும் வடிசாராயம் எனும் பெயரில் விஷம் கொடுத்து எமது சமூகத்தை அழிப்பவர்கள் இந்த சமூகத்துடன் இணைந்து வாழத் தகுதியற்றவர்கள்.

எனவே இங்குள்ள பெற்றோர்கள் விழிப்பாக இருக்க வேண்டும். எமது பிள்ளைகளை இந்த கொடியவர்களிடம் இருந்து பாதுகாக்க வேண்டும். அதே போல் இந்த சட்ட விரோத மது பாவனையை இங்கிருந்து ஒழிக்க அனைவரும் ஒன்றுபட வேண்டும். – என்றார்.





# சலூன்கள் மற்றும் வெதுப்பகங்களது உரிமையாளர்களுடன் விசேட சந்திப்பு!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட சிகை அலங்கார உரிமையாளர்கள் மற்றும் வெதுப்பக உரிமையாளர்களுக்கு இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க் கிழமை களுதாவளையில் அமைந்துள்ள பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் மேகசுந்தரம் வினோராஜ் தலைமையில் நடைபெற்றது.

அந்தப் பிரதேச சபைக்கு உட்பட்ட சிகை அலங்கார நிலையங்களில் பாடசாலை மாணவர்களுக்கு ஏற்ற வகயில் சிகை அலங்காரம் செய்ய வேண்டும், சிகை அலங்காரம் செய்யும் போது சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்கப்படல் வேண்டும், பாடசாலை மாணவர்களுக்கு மாதிரி (மொடலிங்) வடிவில் சிகை அலங்காரம் செய்ய முடியாது என இதன்போது முடிவெடுக்கப்பட்டது.

வெதுப்பகங்கள் வெதுப்பகப் பொருள்கள் உற்பத்தியாளர்களின் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது. வெதுப்பக உணவுப் பொருள்களை கிராமங்கள் தோறும் ஓட்டோவில் கொண்டு சென்று விற்பனை செய்யும்போது ஒருவர் மாத்திரம் அதாவது சாரதி மாத்திரமே பயணம் செய்து பொருள்களை விற்பனை செய்தல், அந்த ஓட்டோவின் வேகம் 15 கிலோ மீற்றர் வேகத்தில் பயணம் செய்தல், 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் மாத்திரமே ஓட்டோ செலுத்துவதற்கு அனுமதித்தல், அவ்வாறு செல்லும் சாரதிகள், சுத்தம், சுகாதாரத்தைக் அவசியம் கடைப்பிடித்தல், ஒரு இறாத்தல் பாண் 140 ரூபாவுக்கு விற்பனை செய்தல், ஓட்டோவில் இவ்வாறு வெதுப்பகப் பொருள்கள் உற்பத்தியாளர்களாக விற்பனை செய்பவர்கள் ஒருவருக்கொருவர் முரண்படாது செயற்படுதல், இவ்வாறு ஓட்டோவில் விற்பனைகளில் ஈடுபடுபவர்கள் சிறுவர்கள், பெண்கள், பாடசாலை மாணவர்கள் போன்றோரிடத்தில் மிகவும் பொறுப்புடன் நடந்து கொள்தல், இந்த நடைமுறைகளை மீறுபவர்களுக்கு பிரதேச சபையால் நடவடிக்கை மேற்கொள்தல் போன்ற பல தீர்மானங்கள் இதன்போது எடுக்கப்பட்டன.

இதன்போது பிரதித் தவிசாளர் வசீகரன், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தல்கள், பிரதேச சபை அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




# அயலகத் தமிழர் தின நிகழ்வுகளை வரவேற்கிறோம் வடக்கு மீனவர் நலனும் உள்வாங்கப்பட வேண்டும்!

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவிப்பு

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

அயலகத் தமிழர் தினம் என்ற நிகழ்வை நாங்கள் வரவேற்றாலும் வட பகுதி மீனவர்களின் நலனும் அதில் உள்வாங்கப்பட வேண்டும். இன்று வரை தமிழக மீனவர்களின் வருகையை கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. அதற்குரிய நன்மை தீமைகள் தமிழக முதல்வரையே சேரும்.

இவ்வாறு வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழகத்தில் இடம்பெற்ற அயலக தமிழர் தினம் என்ற நிகழ்வு தமிழக முதல்வர் முக ஸ்டாலின் தலைமையில் விமர்சையாக நடைபெற்றுள்ளது. இலங்கையில் இருந்து அதற்கான பிரதிநிதிகள் சென்றிருக்கின்றனர். பல விடயங்கள் குறிப்பாக தமிழால் இணைகின்ற பல விடயங்கள் அங்கு இடம் பெற்றுள்ளன.

இது காலத்தின் தேவையாகும். உண்மையிலேயே இவ்வாறான செயற்பாடுகள்தான் தமிழ் என்ற உணர்வையும் தமிழோடு இணைய வேண்டும் என்ற அந்த ஆசையும் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தி இருந்தன.

உண்மையில் இரு நாடுகளையும் நாங்கள் எடுத்துக் கொண்டால் தமிழால் இணைவோம் என்பதற்குப் பொருத்தமான நாடாக தமிழகத்துக்கும் வடபகுதிக்கும் நிறைய உறவு இருக்கிறது. குறிப்பாக இந்தியாவுக்கும் இலங்கைக்குமான உறவு தமிழால் இணையக் கூடிய வகையில் எந்த நாடுகளும் இல்லை. இலங்கைக்குத்தான் அந்த வார்த்தை பொருத்தமானது.

எனவே நான் கூற வருகின்ற விடயம், இந்தத் தமிழால் இணைவோம் என்பது வார்த்தை. உண்மையில் பாராட்ட கூடியதாக இருந்தாலும் தமிழால் நாங்கள் இணைந்திருக்கின்றோமா?.

தமிழ் நாட்டில் இருக்கும் தமிழர்களுக்கும் இலங்கை வடபகுதியில் இருக்கும் தமிழர்களுக்குமான உறவு தொப்புள் கொடி உறவு என்பதை நாங்கள் ஏற்றுக் கொண்டிருந்தால் இந்த உறவு ரீதியாக இது ஒரு அரசியலுக்கும் மொழிக்குமானது அல்ல.

அதையும் தாண்டி வாழ்வாதாரம், ஒன்றிணைவு, அவர்களின் குடும்ப நிகழ்வுகள் அனைத்தும் அதன் ஊடாகப் பார்க்கப்பட வேண்டியவையாகும். இருந்தபோதும் இங்கு நடைபெறும் விடயம் தமிழக மீனவர்களால் வடபகுதியில் இருக்கும் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த நிகழ்வு தொடர்ச்சியாகப் பல வருடங்கள் நடைபெற்று வருகின்றன என்று குறிப்பிடப்பட்டு இருந்தாலும் தொடர்ச்சியான இந்தப் பாதிப்புத் தொடர்பாக எந்த விதமான பேச்சுகள் அவர்களுக்கு செயற்பாட்டு வாயிலாக அந்த உறவை கட்டி எழுப்பக் கூடிய எந்த செயற்பாடுகளும் இந்த நிகழ்வுகளில் நடைபெறுகின்றதா?

இலங்கையில் இருந்து கலந்து கொண்டுள்ள செந்தில் தொண்டமான், இலங்கை சார்ந்து சென்றாலும் மலையகம் சார்ந்தே செல்கின்றார். மலையகம் சார்ந்த விடயங்களை அவர் முன்னிலைப் படுத்துகின்றார். வடக்கு சார்ந்த மீனவர்கள், வடக்கு, கிழக்கில் இருக்கும் மக்கள் தொடர்பாகப் பேசுவதற்கு அவர் அச்சப்படுகிறார்.அல்லது பேசாமல் தவிர்த்து வருகிறார்.

எனவே இலங்கையில் இருந்து செல்லும் பிரதிநிதிகளை நாங்கள் இலங்கைப் பிரதிநிதிகளாக பார்க்கிறோம். எனவே அவர் இங்குள்ள விடயங்களை முன்னுரிமைப்படுத்த வேண்டும். அயலகத் தமிழர் தினம் என்னும் சொல்லை நாங்கள் வரவேற்றாலும், வட பகுதி மீனவர்களின் நலனும் அதில் உள்வாங்கப்பட வேண்டும்.

தமிழகத்தால் இழைக்கப்படுகின்ற அநீதிக்குப் பதில் கூற வேண்டிய பொறுப்பு தமிழக முதலமைச்சருக்கு இருக்கிறது. வெறுமனே தமிழக உறவை மாத்திரம் பயன்படுத்தித் தமிழகத்துக்கும் தமிழ் மக்களுக்குமான மொழி உறவை ஊக்கப்படுத்தும் அதேநேரம் இங்கு மக்கள் படுகின்ற துன்பங்களையும் அவர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வருகின்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தொழில் நடவடிக்கைகள் இன்றி வீடுகளில் முடங்கி உள்ளனர். அவர்களுக்கான எந்த இழப்பீடுகளும் இதுவரை வழங்கப்படவில்லை. ஒரு சில உதவிகள் வழங்கப்பட்டாலும் அது அவர்களுக்குப் போதுமானதாக இல்லை.

மக்கள் அரசின் கருத்துகளுக்கு மதிப்பளித்து ஓய்வெடுக்கும் நிலையில் தமிழகக் கடற்தொழிலாளர்கள் எமது கடற்பகுதிக்குள் வந்து சூறை யாடுகின்ற செயல்பாடு இன்று வரை தொடர்கிறது.

வெறுமனே ஒரு சில படகுகள் கைது செய்யப்பட்டாலும், அவர்களின் வருகையை இன்றுவரை கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது.

அவர்களைக் கட்டுப்படுத்த முடியாமைக்கான காரணம் தமிழக முதல்வரை சேரும். அவர் தான் இத்தொழிலை ஊக்குவித்து வருகிறார் என வட பகுதி மீனவர்கள் கருதுகின்றனர்.

எனவே தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லையை தாண்டாது இருக்க அந்த நாட்டு அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.– என்றார்.




# புதுக்குடியிருப்பில் முதல் முறையாக பட்டத்திருவிழாவும் உணவுத்திருவிழாவும்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு குயின் பூங்காவில் முதன்முறையாக பாரம்பரியத்தின் பெருமையையும், ருசியின் மகிழ்வையும் ஒன்றிணைக்கும் வகையில் உணவுத் திருவிழாவும் பட்டத் திருவிழாவும் மிக பிரமாண்டமான முறையில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற இருக்கின்றன.

புதுக்குடியிருப்பில் பிரசித்திபெற்ற குயின்பார்க்கின் ஏற்பாட்டில் முதன் முறையாக உணவுத் திருவிழா மற்றும் பட்டத்திருவிழாவும் பிரமாண்டமான முறையில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

பொதுமக்களை மகிழ்விக்கும் வகையில் இந்த விழாவில், சிறுவர் முதல் பெரியவர்கள்வரை அனைவரும் கலந்து கொள்ளும் வகையில் விஷேடமான பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும் பல்வேறு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெறுபவர்களுக்குப் பெறுமதியான பரிசுப் பொருள்களும் வழங்கப்படவுள்ளன.

# கைதடி வடக்கில் வீதி விளக்குகள் எப்போது திருத்தம் செய்யப்படும்?

## பிரதேச சபை உறுப்பினர் சிவபாதம் கேள்வி

சாவகச்சேரி பிரதேச சபை பதவி ஏற்ற பின்னர் நீண்ட காலமாகக் கைதடி வடக்கு வட்டாரத்தில் வீதி விளக்குகள் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்னும் கோரிக்கை கைதடி வடக்கு வட்டார மக்களால் தொடச்சியாக முன்வைக் கப்பட்டு வருகின்றது.

எனினும் இந்த விடயம் கவனத்தில் எடுக்கப்படவில்லை. இது கைதடி வடக்கில் உள்ள மக்களையே ஒதுக்குவதற்கு சமனானது என்று கைதடி வடக்கு வட்டார உறுப்பினரான சிவபாதம் கவலையுடன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

இந்த நிலையில், இது எல்லா வட்டாரங்களிலும் பிரச்சினையாக இருப்பதைச் சபைக் கூட்டங்களில் எல்லோரும் கதைத்தபோதும் நிதிப் பற்றாக்குறை இருப்பதையும், இருக்கும் நிதியில் திருத்தம் செய்வதற்கு மின்குமிழ்கள் கொள்வனவு செய்து அதனை சமனாக 17 வட்டாரங்களுக்கும் பகிர்ந்து வழங்குவதாக தவிசாளர் வாக்குறுதி வழங்கி இருந்தார்.

ஆனால் ஆறு மாதங்கள் கடந்த போதும் கைதடி வடக்கு வட்டாரத்தில் வீதி விளக்குகள் திருத்தம் செய்யப்படாத நிலையில் உள்ளன.

மக்களின் பங்களிப்புடன் கைதடியில் உள்ள ஆறு கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் வீதி விளக்குகளைத் திருத்தம் செய்வதற்கும், புதிய வீதி விளக்குகளைப் பொருத்துவதற்கும், குமரநகர் வெளிநாட்டு ஒன்றியம் உதவி செய்ய முன் வந்துள்ளது.



அதற்கான அனுமதியை வழங்குமாறு பிரதேச சபையில் பிரேரணையாக சமர்ப்பித்த போது அனுமதி வழங்கலாம். கோரிக்கை கடிதம் எழுத்துமூல வழங்குமாறு தவிசாளர் கோரியதால் கடிதம் வழங்கப்பட்டது.

நீண்ட நாட்களாக அந்த கடிதத்துக்கு அனுமதி வழங்கப்படவில்லை அதன் பின்னர் அனுமதியை எப்போது வழங்குவீர்கள் என கேட்டபோது பிரதேச சபை உறுப்பினரின் கடித தலைப்பில் வழங்கிய கடிதத்துக்கு அனுமதி வழங்கமுடியாது என்றும் வெளிநாட்டு அமைப்பின் பெயரில் கோரிக்கை தராமல் உள்ளூரில் உள்ள அமைப்பின் பெயரில் கோரிக்கை கடிதம் வழங்கினால் அனுமதி தருவதாக வாய்மொழி மூலம் தவிசாளர் எனக்கு தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் கைதடி சைவ ஐக்கிய சங்கத்தின் சார்பாக அதே கோரிக்கை அவர்களின் கடித தலைப்பில் எழுத்து மூலம் வழங்கியிருந்தேன். அதற்கும் அனுமதி தருவதாக எனக்கு சொல்லப் பட்டது. ஆனால் அனுமதி தரப்பட வில்லை.

இறுதியாக இதற்கு அனுமதி வழங்கப்படுமா மாட்டாதா என நேரடியாக தவிசாளரிடம் சென்று கேட்டபோது, கடிதம் அடிப்பதற்கு சொல்லி இருக்கின்றேன். அவர்கள் கடிதம் அடித்து முடிந்ததும் கையொப்பமிட்டு அனுமதி கடிதத்தை தருகின்றேன் என தவிசாளர் சொன்னார்.

நானும் நீண்ட நேரம் காத்திருந்த போதும், தவிசாளர் எனக்கும் சொல்லாமல் அங்கிருந்து வெளியேறிச் சென்றுவிட்டார்.

இதன்மூலம் திட்டமிட்டு கைதடி வடக்கு வட்டாரம் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஒதுக்கப்படுவது தெரியவந்துள்ளது.

இது கைதடி வடக்கில் உள்ள மக்களையே ஒதுக்குவதற்கு சமனானது.- என்றார்.



# திருகோணமலையில் பாதிக்கப்பட்ட மாணவருக்குக் கற்றல் உபகரணம்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

கடந்த மாதம் நாட்டில் ஏற்பட்ட டித்வா புயல் காரணமாகப் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்டத்தில் கல்வி கற்கும் தெரிவு செய்யப்பட்ட சுமார் 100 மாணவர்களுக்கு crest foundation ஊடாக இலவச கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. நிகழ்வு திருகோணமலை மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வானது அகில இலங்கை வாலிபர் முஸ்லீம் பேரவையின் திருகோணமலை மாவட்ட பணிப்பாளர் மு.முக்தார் தலைமையில் மாவட்ட கிளைகளின் ஒத்துழைப்புடன் நடை பெற்றது.

விஷேடமாக இந்த நிகழ்வின் அதிதிகளாக புற்றுநோய் விஷேட நிபுணர் வைத்தியர் கில்மி, கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் திருகோணமலை மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஜாபீர் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் அஷ்ரப் ஆகியோர் கலந்து கொண்டனர்.











# புத்துவெட்டுவான் கிராமத்துக்கு நிவாரணம் சந்நிதியான் ஆச்சிரமம் நேரடியாக வழங்கல்!

துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் உள்ள புத்துவெட்டுவான் கிராமத்தில் உள்ள 26 குடும்பங்களுக்கு, ஒரு லட்சத்து 10 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருள் களைச் யாழ்ப்பாணம் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் நேரடியாகச் சென்று வழங்கியது. அரிசி, பருப்பு, சீனி, தேயிலை, நூடில்ஸ் உள்ளடங்களாக பொருள்களே இவ்வாறு வழங்கப்பட்டன.

இவ் உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்க ளுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் தெய்வீக இன்னிசை அரங்கம்

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலை மையில் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை தெய்வீக இன்னிசை அரங்கம் இடம்பெறவுள்ளது.

செல்வி மதுராங்கனி நந்தகோபால், செல்வி.அக் ஷலா நந்தகோபால் ஆகி யோரின் பாடல்களுடன் இசைக்கலைமணி நடேசு செல்வச்சந்திரன் குழுவினரின் இன்னிசை இடம்பெறவுள்து.

வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நிகழ்வு ஆரம்பமாகி இடம்பெற வுள்ளது.

# வல்வை இரத்ததான சங்க 84 ஆவது இரத்ததான நிகழ்வு

வல்வெட்டித்துறை, இரத்ததானச் சங்கம் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டி ருக்கும் 84 ஆவது இரத்ததான நிகழ்வு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிமுதல் வல்வெட்டித்துறை, நெடியகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் கலந்துகொண்டு குருதிக் கொடை வழங்க விரும்பும் அனைவரும் 0779911131 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள் ளது.

குருதிக்கொடை வழங்குபவர்களை ஊக்குவிக்கும் வகையில் கற்றல் உபகரணங்கள் மற்றும் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படுவதுடன்

அவர்களில் ஒருவர் வெள்ளிப் பதக்கும் அணிவிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட வுள்ளார் என்று வல்வெட்டித்துறை இரத்த தானச்சங்கத் தலைவர் பா. வீரசுரேந்திரன் தெரிவித்துள்ளார்.





# புதுக்குடியிருப்பில் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பண்டிகைப் பொதிகள்!

## சந்நிதியான் ஆச்சிரமம் வழங்கியது

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் உள்ள தேவிபுரம் விக்கி குடியிருப்பைச் சேர்ந்த விழுப்புண் அடைந்த மற்றும் மாற்றுத் திறனாளியான முன்னால் போராளிகளைச் சேர்ந்த 30 குடும்பங்களுக்கு, தைப்பொங்கலை முன்னிட்டு 75 ஆயிரம் ரூபா பெறுமதியான பண்டிகைப் பொதிகள் வழங்கப்பட்டன.

திங்கள்கிழமை விக்கி குடியிருப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.





# இளைஞர்களின் மனநிலை மாற்றத்தில் சமூக ஊடகங்களின் பங்கு!

இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகில் சமூக ஊடகங்கள் இளைஞர்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து விட்டன.காலையில் நித்திரையிலிருந்து எழும்புவதிலிருந்து இரவு நித்திரைக்கு செல்லும் வரையிலும் இளைஞர்களும் Facebook, Instagram, TikTok, YouTube, WhatsApp போன்ற தளங்களிலேயே அதிக நேரம் செலவழிக்கின்றனர். உலகம் முழுவதுள்ள மக்களை நொடிப் பொழுதில் இணைக்கும் இந்த ஊடகங்கள், தகவல் பகிர்வு, அறிவு பரவல், புதுமை அறிதல் போன்ற பல நன்மைகளை வழங்கினாலும், அவை இளைஞர்களின் மனநிலையில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. சமூக ஊடகங்கள் இளைஞர்களின் வாழ்வியலோடு, உணர்வுகளோடு, சிந்தனைகளோடு நெருக்கம் பெற்றுள்ளதால், அதன் தாக்கமும் விரிவாகக் காணப்படுகிறது.

முதலில், சமூக ஊடகங்கள் இளைஞர்களுக்குள் self image பற்றிய எண்ணங்களை மாற்றுகின்றன. அழகு, வாழ்க்கை முறை, உடல் அமைப்பு போன்றவற்றை அளவுகோலாக்கிக் காட்டும் ஒப்பீட்டு கலாசாரம் இளைஞர்களைக் கடுமையாகத் தாக்குகிறது. பிரபலங்கள், 'இன்ஃப்ளுயன்சர்கள்' பகிரும் பில்டர் செய்யப்பட்ட படங்களும், செயற்கை சீரமைப்பு செய்யப்பட்ட வீடியோக்களும் உண்மையான வாழ்க்கையைப் பிரதிபலிப்பதில்லை. ஆனால் இளைஞர்கள் அதை நிஜம் என்று நம்பித் தங்கள் வாழ்வையும் அதனுடன் ஒப்பிடுகின்றனர். இதனால் தாழ்வு நிலை உணர்வு, சமூக ஒப்பீடு, அவநம்பிக்கை, தன்னம்பிக்கை குறைவு போன்ற மனநிலை மாற்றங்கள் அதிகரிக்கின்றன.

அடுத்து, சமூக ஊடகங்கள் உணர்ச்சித் தாக்கங்களைப் பெரிதும் ஏற்படுத்துகின்றன. ஒரு 'லைக்', 'கமெண்ட்', 'ஷேர்' மூலம் கிடைக்கும் அங்கீகாரம் இளைஞர்களின் உணர்ச்சியை பலவீனப்படுத்துகிறது. விரும்பிய அளவு அங்கீகாரம் கிடைக்காதபோது அவர்கள் மனஅழுத்தம், பதற்றம், கவலை போன்றவற்றில் சிக்கிக் கொள்கிறார்கள். இதனை நிபுணர்கள் 'Dopamine loop' என அழைக்கின்றனர். அடிக்கடி அறிவிப்புகள் வரும்போது மூளை உடனடியாக மகிழ்ச்சியை எதிர்பார்க்கிறது. இவ்வாறு உடலில் சுரக்கும் இரசாயனங்கள் இளைஞர்கள் சமூக ஊடகங்களோடு மிகுந்த ஈடுபாட்டுடன் வைத்திருக்கத் தூண்டுகின்றன. இதன் விளைவாக கோபம், சோர்வு, தனிமை உணர்வு ஆகியவை உருவாகின்றமை குறிப்பிடத்தக்கது.

சமூக ஊடகங்களில் அதிகம் பேசப்படும் மற்றொரு அம்சம் சைபர் புல்லியிங். இணையத்தில் இளைஞர்கள் எதிர்கொள்ளும் அவமதிப்புகள், கேலிகள், விமர்சனங்கள், அச்சுறுத்தல்கள் ஆகியவை அவர்களின் மனநிலையை மோசமாகப் பாதிக்கின்றன. நேருக்கு நேர் போராட முடியாத சூழலில், அடையாளம் தெரியாமல் வரும் விமர்சனங்கள் அவர்களை மனரீதியாகக் காயப்படுத்தும். பல இளைஞர்கள் இதனால் தன்னம்பிக்கை இழப்பு, சமூகப் பின்வாங்கல், தனிமை, சில நேரங்களில் மன அழுத்த நோய்களிலும் சிக்குகின்றனர்.

சமூக ஊடகங்களில் வேகமாகப் பரவும் போலித் தகவல்கள், தவறான கருத்துக்கள், வதந்திகள் ஆகியவை இளைஞர்களின் சிந்தனை முறையை மாற்றுகின்றன. குறுகிய நேரத்தில் அதிக தகவல்கள் வரும் போது, அவற்றை சோதித்தறியும் திறன் குறைந்து விடுகிறது. சில விடயங்களை உண்மை என நம்பி கோபம், பயம், எதிர்ப்பு, குழப்பம் போன்ற உணர்ச்சி மாற்றங்களுக்குள் உள்ளாகின்றனர்.

இதைத் தொடர்ந்து, சமூக ஊடகங்கள் சமூக உறவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நேருக்கு நேரான உரையாடல்கள் குறைந்து, ஆன்லைன் உரையாடல்கள் அதிகரித்துள்ளன. இதனால் சமூக திறன்கள் பலவீனமடைந்து முகபாவனைகள், குரல் நடைகள், உடல் மொழி ஆகியவற்றின் மூலம் புரிந்துகொள்ள வேண்டிய உணர்வுகளை இளைஞர்கள் இழந்து வருகிறார்கள். இது அவர்களின் மனநிலை உறுதியை பாதிக்கின்றது. உண்மையான உறவுகளுக்கு பதில், மெய்நிகர் தொடர்புகளில் மனநிறைவு தேட முயல்வது அவர்களை உணர்ச்சி ரீதியாக தளர்வடையச் செய்கிறது.

இவ்வாறாக பல்வேறுபட்ட விமர்சனங்கள் சமூக ஊடகங்களின் பால் காணப்பட்டாலும் எல்லாவற்றையும் எதிர்மறை கோணத்தில் மட்டுமே பார்க்க முடியாது. இவை இளைஞர்களுக்கு அறிவு பரவல், திறன் வளர்ப்பு, ஊக்குவிப்புக்கள், வாய்ப்புகள் என்பவற்றையும் தருகின்றன. சமூக அக்கறை, சமூக மாற்றம், கல்வி தொடர்பான நுண்ணறிவுகள், தொழில்நுட்ப அறிவு ஆகியவற்றை இளைஞர்கள் எளிதில் கற்கின்றனர். இது அவர்களின் மனநிலையில் நேர்மறையான தாக்கத்தை அளிக்கின்றன.

எனவே தான் நன்மையும் தீமையும் நிறைந்த இந்தத் தளங்களை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதே இளைஞர்களின் மனநிலையில் தாக்கம் செலுத்துகின்றன. பொறுப்புள்ள, சமநிலையான, விழிப்புணர்வான பயன்பாடு மட்டுமே இளைஞர்களின் மனநிலையை ஆரோக்கியமாக மாற்றக் கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

***சண்சியா வரதராசன்,***
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.



# ஊடகத்துறையில் பெண்களும் சமூகத்தின் பார்வையும்...!

**லிங்கேஸ்வரன் கருனிகா,**
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

தற்கால நவீன உலகில், ஊடகத் துறை என்பது ஒரு சமூகத்தின் கண்ணாடியாகக் கருதப்படுகிறது. ஊடகம் என்பது மக்களிடம் தகவல், விழிப்புணர்வு மற்றும் கருத்துகளை பரப்பும் முக்கிய துறை ஆகும்.

இந்தத் துறையில் பெண்களின் வருகையும் பங்களிப்பும் கடந்த சில தசாப்தங்களாகப் பெரும் வளர்ச்சியை எட்டியுள்ளன. முன்பெல்லாம் செய்தி வாசிப்புடன் நின்ற பெண்களின் பணி, இன்று போர்க் களச் செய்திகள், புலனாய்வு இதழியல், விளையாட்டு வர்ணனை மற்றும் தொழில்நுட்பப் பகுப்பாய்வு எனப் பல பரிமாணங்களில் விரிவடைந்துள்ளது.

இதனால், பெண்கள் ஊடகத்தில் பங்கு பெறுவது சமத்துவ வளர்ச்சிக்கு உதவுகிறது என்று சமூகத்தின் ஒரு பகுதி நம்புகிறது. அவர்களின் அறிவு, பொறுப்புணர்வு, ஒழுக்கம் போன்ற தகுதிகளைக் கொண்டு சிறப்பாகச் செயற்படுவதைப் பலர் பாராட்டுகின்றனர். செய்தி வாசிப்பு, தொகுப்பாளர், செய்தியாளர், பின்நிகழ்வுப் பணியாளர் என பல நிலைகளில் பெண்கள் செயல்படுகின்றனர். அத்தோடு உணர்வு சார்ந்த விஷயங்களை பெண்கள் நுணுக்கமாகவும் கையாளுகிறார்கள்.

பெண்களின் கதைகள், சமூகப் பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதிலும் அவர்கள் பங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறிருக்க சில சமுதாயப் பகுதிகள் இன்னும் பெண்கள் ஊடகத்தில் இருப்பதை ஏற்க மறுக்கின்றன. உடை, தோற்றம், குரல் போன்றவற்றைப் பொருளாக மதித்து விமர்சிப்பதும், பெண்களின் நிலைப்பாட்டை மதிக்காமல், அவமதிக்கும் பார்வையும் காணப்படுகிறது. இன்னும் சில இடங்களில் பெண்கள் ஊடகத்தில் இருப்பதைச் சீர்கேடு எனப் பார்ப்பது உண்டு. சில சமயங்களில் பெண்கள் ஊடகத்தில் இருக்க வேண்டாம் என்ற கருத்தும் இடையிடையே கேட்கப்படுகிறது. அதாவது ஊடகத்துறையில் பெண்களைச் சமூகம் இருவேறு கோணங்களில் அணுகுகிறது. ஒருபுறம், துணிச்சலாகக் களத்தில் இறங்கிச் செய்தி சேகரிக்கும் பெண்களைப் பாராட்டும் சமூகம், மறுபுறம் அவர்களின் தோற்றம் மற்றும் தனிப்பட்ட ஒழுக்கம் சார்ந்த விமர்சனங்களை முன்வைக்கத் தவறுவதில்லை.

பெண் ஊடகவியலாளர்கள் தங்களின் கருத்துகளைப் பதிவிடும்போது, அவை அறிவுசார் ரீதியாக விவாதிக்கப்படுவதை விட, அவர்களின் பாலினம் சார்ந்த தனிப்பட்டத் தாக்குதல்களுக்கே அதிகம் உள்ளாக்கப்படுகின்றன. மேலும், ஊடகத்துறை என்பது நேரக் கட்டுப்பாடு அற்ற ஒரு பணிச்சூழலைக் கொண்டது.

இரவு நேரப் பணிகள், வெளியூர் பயணங்கள் போன்றவற்றில் ஈடுபடும் பெண்களுக்குக் குடும்பம் மற்றும் சமூகத்திடமிருந்து போதுமான ஆதரவு கிடைப்பதில்லை. “பெண்களுக்கு இது ஏற்ற துறையா?” என்ற பழமைவாதக் கேள்வி இன்றும் பல இடங்களில் ஒலிக்கிறது.

இது தவிர, சமூக ஊடகங்களின் வளர்ச்சி பெண் ஊடகவியலாளர்களுக்கு ஒரு வரமாக அமைந்தாலும், அதன் மூலம் வரும் உருவக்கேலி (Body Shaming) மற்றும் இணைய வழித் துன்புறுத்தல்கள் அவர்களுக்குப் பெரும் மன உளைச்சலைத் தருகின்றன. ஆனால் ஊடகத் துறையில் பெண்கள் என்பது இன்று தேவையும் சாதனையும் ஆகும். சமூகப் பார்வை மாற்றம் அடைய, அவர்களின் பங்களிப்பு முக்கியமானது.

பெண்கள் ஊடக துறையில் வெற்றிகரமாக நடக்க, சமூகம் அவர்களுக்கு ஆதரவாக மாற வேண்டும். சமூக பார்வை நேர்மறையாக மாறினாலே பெண்கள் தங்கள் முழுதிறமையையும் வெளிப்படுத்த முடியும். சுருக்கமாகக் கூறின், ஊடகத்துறையில் பெண்களின் வெற்றி என்பது அவர்களின் தனிப்பட்ட சாதனை மட்டுமல்ல, அது சமூக மாற்றத்தின் குறியீடாகும். பெண்களின் குரல் ஊடகங்களில் வலுவாக ஒலிக்கும் போதுதான், ஒரு சமநிலையான மற்றும் நீதியான சமுதாயத்தைப் படைக்க முடியும்.



## டிஜிட்டல் யுகத்தின் கண்ணிவெடிகள்:

# சமூக ஊடகங்களின் இருண்ட பக்கங்கள்!

தகவல் தொழில்நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சி, மனித குலத்துக்கு வழங்கிய ஆகச்சிறந்த கொடை சமூக ஊடகங்கள் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. முகநூல், இன்ஸ்டாகிராம், ருவிட்டர் போன்ற தளங்கள் எல்லைகளைக் கடந்து மனிதர்களை இணைக்கின்றன. ஆனால், இந்தத் தொழில்நுட்ப வசதிக்கு அடியில் ஒளிந்து கொண்டிருக்கும் இருண்ட பக்கங்கள், இன்று ஒரு சமூகப் பேரழிவை நோக்கி நம்மைத் தள்ளிக்கொண்டிருக்கின்றன. தொடக்கத்தில் பொழுதுபோக்காகவும் தகவல் பரிமாற்றத்திற்காகவும் அறிமுகமான இந்தத் தளங்கள், இன்று மனிதர்களின் ஆழ்மனதைத் தூண்டி, அவர்களைத் தங்களுக்கு அடிமையாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது வெறும் ஒரு செயலி அல்ல. மாறாக மனிதர்களின் கவனத்தைச் சிதறடித்து, அவர்களின் சிந்திக்கும் திறனை மழுங்கடிக்கும் ஒரு கண்ணுக்குத் தெரியாத போதைப் பொருளாக உருவெடுத்துள்ளது.

மாய பிம்பங்களின் பின்னால் ஒளியும் மனநலப் பாதிப்புகள்

சமூக ஊடகங்களின் மிக முக்கியமான இருண்ட பக்கம், அது மனிதர்களிடையே உருவாக்கும் போலியான ஒப்பீடு ஆகும். ஒவ்வொரு தனிமனிதனும் தனது வாழ்வின் கசப்பான பக்கங்களை மறைத்துவிட்டு, மிகச்சிறந்த தருணங்களை மட்டுமே புகைப்படங்களாகவும் காணொளிகளாகவும் பதிவிடுகிறான். இதைப் பார்க்கும் மற்றவர்கள், "அனைவரது வாழ்க்கையும் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது, நம் வாழ்க்கை மட்டும் ஏன் இவ்வளவு சலிப்பாக இருக்கிறது?" என்ற தாழ்வு மனப்பான்மைக்குத் தள்ளப்படுகிறார்கள். இந்த ஒப்பிடுதல் மனப்பான்மை நாளடைவில் தீவிர மனச்சோர்வு, பதற்றம் மற்றும் தூக்கமின்மைக்கு வழிவகுக்கிறது. குறிப்பாக, இளம் தலைமுறையினர் தங்களின் சுயமரியாதையை இணையத்தில் கிடைக்கும் 'லைக்குகள்' மற்றும் 'கமெண்டுகள்' மூலம் அளவிடத் தொடங்கியிருப்பது, ஒரு சமூகச் சீரழிவின் தொடக்கமாகும். நிஜ உலக சாதனைகளை விட, திரையில் கிடைக்கும் அங்கீகாரமே முக்கியம் என்ற மனநிலை அவர்களைச் சமூகத்தில் இருந்து தனிமைப்படுத்துகிறது.



பொனிஸ்ரெலா சந்தியாசன்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

வதந்திகளின் தொழிற்சாலையும் சமூகப் பாதுகாப்பின்மையும்

ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கருதப்படும் ஊடகங்களுக்கு இணையாக இன்று சமூக ஊடகங்கள் வளர்ந்துவிட்டன. ஆனால், இங்குத் தகவல்கள் சரிபார்க்கப்படுவதில்லை என்பதுதான் மிகப்பெரிய சாபக்கேடு.

ஒரு சிறு தீப்பொறி போன்ற பொய் செய்தி, சில நிமிடங்களில் மில்லியன் கணக்கான மக்களைச் சென்றடைந்து, கலவரங்களாகவும் வன்முறையாகவும் உருவெடுக்கிறது. அரசியல் இலாபத்துக்காகவும், மதவாதத்தைத் தூண்டுவதற்காகவும் திட்டமிட்டுப் பரப்பப்படும் வதந்திகள், ஒரு நாட்டின் அமைதியையே குலைக்கும் வல்லமை கொண்டவை.

இது தவிர, 'சைபர் புல்லிங் ' எனப்படும் இணையவழித் துன்புறுத்தல் இன்று பல உயிர்களைப் பறித்து வருகிறது. திரைக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு ஒருவரைப் பற்றி அவதூறு பரப்புவதும், ஆபாசமான விமர்சனங்களை முன்வைப்பதும் தனிமனித உரிமைகளைப் பறிப்பதோடு மட்டுமல்லாமல், பாதிக்கப்பட்டவர்களைத் தற்கொலை விளிம்புவரை தள்ளுகிறது.

தனியுரிமை இழப்பும் தரவுச் சுரண்டலும்

"இணையத்தில் எதுவும் இலவசம் இல்லை; நீங்கள் ஒரு பொருளுக்குப் பணம் செலுத்தவில்லை என்றால், அங்கு நீங்கள்தான் அந்தப் பொருள்" என்ற கசப்பான உண்மையைச் சமூக ஊடகப் பயனாளர்கள் உணரத் தவறிவிடுகிறார்கள். நமது ஒவ்வொரு தேடலும், நாம் விரும்பும் பொருள்களும், நமது இருப்பிடமும் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. இந்தத் தரவுகள் மிகப்பெரிய நிறுவனங்களுக்கு விற்கப்பட்டு, நமது சிந்தனைகளையே தீர்மானிக்கும் வகையில் விளம்பரங்கள் நம் மீது திணிக்கப்படுகின்றன. நமது அந்தரங்கத் தகவல்கள் திருடப்படுகின்றன. இது ஒரு தனி மனிதனின் சுதந்திரமான முடிவெடுக்கும் திறனைச் சிதைத்து, அவனை ஒரு டிஜிட்டல் அடிமையாக மாற்றுகிறது.

சமூக ஊடகங்கள் என்பவை நெருப்பைப் போன்றவை. அவற்றைச் சரியாகக் கையாண்டால் வெளிச்சம் கிடைக்கும், தவறினால் அதுவே வாழ்வையே சுட்டெரித்து விடும். தொழில்நுட்பத்தைத் தவிர்க்க முடியாது, ஆனால் அதன் மீதான நமது பிடியை நாம் தளர்த்திக் கொள்ளக் கூடாது. வாரத்தில் ஒரு நாள் 'டிஜிட்டல் டிடாக்ஸ்' எனப்படும் இணைய விடுமுறையை எடுத்துக் கொள்வதும், குடும்ப உறுப்பினர்களுடன் நேரடியாக உரையாடுவதும், நம்பகமான ஊடகங்கள் மூலம் செய்திகளை உறுதிப்படுத்துவதும் காலத்தின் கட்டாயமாகும்.

அரசுகள் கடுமையான சட்டங்களைக் கொண்டு வருவதோடு, தனிமனித விழிப்புணர்வு மட்டுமே இந்தத் டிஜிட்டல் மாய வலையிலிருந்து நம்மை விடுவிக்கும் ஒரே வழியாகும்.





### பருத்தித்துறை துறைமுக பகுதியில்

# அபாய நிலையில் காணப்பட்ட மின்கம்பம் அகற்றி மாற்றப்பட்டது!

பருத்தித்துறை துறைமுக பகுதியில் எந்த நேரமும் முறிந்து விழும் அபாய நிலையில் காணப்பட்ட மின்கம்பம் நேற்று அகற்றப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரபிதா வின்சென்டீ போல் டக்ளஸ் போலின் தலையீட்டில் இலங்கை மின்சார சபையினரால் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பருத்தித்துறை துறைமுக பகுதிக்கு அதிக எண்ணிக்கையானோர் தினமும் மாலை வேளையில் வந்து செல்கின்றனர். இது பொழுது போக்கு இடமாக காணப்படுவதுடன் கடற்கரை வீதியூடாக அதிகளவான மக்கள் பயணித்தும் வருகின்றனர்.

இந்த நிலையில் எந்த நேரமும் முறிந்து விழும் அபாய நிலையில் மின்கம்பம் ஒன்று சிதைவுக்குள்ளாகி காணப்பட்டது.

இது தொடர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில் இலங்கை மின்சார சபைக்குத் தெரியப்படுத்தி அதனை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை நகரபிதாவால் அறிவுறுத்தப்பட்டது.

இதையடுத்து நேற்று செவ்வாய்க் கிழமை காலை இலங்கை மின்சார சபையின் ஊழியர்களால் மேற்படி மின்கம்பம் பாதுகாப்பான முறையில் அகற்றப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் ஊடககங்களில் செய்தி வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் அரங்கு நல்லூரில்!

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் உரையரங்கு நேற்று செவ்வாய்க் கிழமை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த உரையரங்கில் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் “புதிய அரசியல் அமைப்பு மற்றும் தமிழ்த் தேசியப் பேரவையின் தமிழக அரசியற் தலைவர்களுடனான சந்திப்பு” பற்றி உரையாற்றியிருந்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் அரசறிவியற் துறையின் முதுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம் “வெனிசுலாவில் அமெரிக்க இராணுவத் தலையீடும் அதில் இருந்து அரசற்ற தேசிய இனங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமும்” பற்றி உரையாற்றியிருந்தார்.

மண்டபம் நிறைந்த அரசியல் ஆர்வலர்கள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் பா. காசிநாதன் வரவேற்புரையை ஆற்றியிருந்தார்.



# ஒபரேஷன் சிந்தூரின்போது தரைவழியில் தாக்குதல் நடத்துவதற்குத் தயாராக இருந்தோம்

## இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் திவேதி தகவல்

ஒபரேஷன் சிந்தூரின்போது பாகிஸ்தானுக்கு எதிராக தரைவழித் தாக்குதல்களைத் தொடங்க இந்திய இராணுவம் தயாராக இருந்ததாக இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி தெரிவித்துள்ளார்.

2026 ஆம் ஆண்டின் முதல் செய்தியாளர் சந்திப்பை இராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி நேற்று புதுடில்லியில் நடத்தினார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒபரேஷன் சிந்தூர் இன்னும் செயல்பாட்டில் உள்ளது. பாகிஸ்தானின் எந்தவொரு வருங்கால தவறான முயற்சிக்கும் பதிலடி கொடுக்கப்படும். ஒபரேஷன் சிந்தூரின்போது இந்திய இராணுவம் தனது படைகளைத் திரட்டியது. பாகிஸ்தான் ஏதேனும் தவறு செய்திருந்தால் தரைவழித் தாக்குதல்களை நடத்த இந்திய இராணுவம் முழுமையாக தயாராக இருந்தது.

ஒபரேஷன் சிந்தூர் துல்லியமாகத் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டது. மே 7 ஆம் திகதி அதிகாலை 12.22 இற்கு தொடங்கப்பட்டு, மே 10 ஆம் திகதி வரை 88 மணி நேரம் நீடித்த இந்த நடவடிக்கை, ஆழமாகத் தாக்குதல் நடத்தி, பயங்கரவாத உள்கட்டமைப்புகளை அழித்து, நீண்டகால அணுசக்தி அச்சுறுத்தலை முறியடித்து கணிப்புகளை மாற்றி அமைத்தது.

இந்த முறை நாங்கள் எடுத்த நடவடிக்கை, குறிப்பாக ஜம்மு காஷ்மீரில் நடந்த துப்பாக்கிச் சூட்டை நாங்கள் எதிர்கொண்ட விதம், வழக்கமானது அல்ல. வழக்கமான போர் எல்லையை விரிவுபடுத்திய நடவடிக்கை இது. இதில், நாங்கள் அவர்களின் சுமார் 100 பேரை ஒழித்தோம். போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதில் இருந்து மேற்கு எல்லை மற்றும் ஜம்மு காஷ்மீரில் உள்ள நிலைமை, உறுதியாக கட்டுப்பாட்டில் உள்ளது. 2025 ஆம் ஆண்டில் 31 பயங்கரவாதிகள் ஒழிக்கப்பட்டனர். அவர்களில் 65 வீதம் பேர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள். தற்போது உள்ளூர் பயங்கரவாதிகளின் எண்ணிக்கை ஒற்றை இலக்கத்தில் உள்ளது.



பயங்கரவாத ஆட்சேர்ப்பு ஏறக்குறைய இல்லை என்றே சொல்லலாம். 2025 இல் வெறும் இரண்டு பேர் மட்டுமே சேர்க்கப்பட்டனர். ஜம்மு காஷ்மீரில் நேர்மறையான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. வலுவான வளர்ச்சிப் பணிகள், புத்துயிர் பெறும் சுற்றுலா, அமைதியான அமர்நாத் யாத்திரை ஆகியவை இதற்கான அடையாளங்கள். இந்த ஆண்டு அமர்நாத் யாத்திரை, கடந்த ஐந்து ஆண்டுகளின் சராசரியைவிட அதிகம். நான்கு லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் அமர்நாத் யாத்திரை மேற்கொண்டனர். பயங்கரவாதத்தில் இருந்து சுற்றுலா நோக்கிய மாற்றம் படிப்படியாக உருப்பெற்று வருகிறது.

ஷாக்ஸ்காம் பள்ளத்தாக்கு தொடர்பாக பாகிஸ்தானுக்கும் சீனாவுக்கும் இடையே 1963 இல் ஏற்பட்ட ஒப்பந்தத்தை இந்தியா சட்டவிரோதமானது என கருதுகிறது. அந்த பள்ளத்தாக்கில் நடைபெறும் எந்தவொரு நடவடிக்கைகளையும் இந்தியா அங்கீகரிக்கவில்லை." என்று தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஆண்டு ஏப்ரல் 22 ஆம் திகதி, பாகிஸ்தானைத் தளமாகக் கொண்ட லஷ்கர்-இ-தொய்பா அமைப்பின் துணை அமைப்பான தி ரெசிஸ்டன்ஸ் பிரண்ட் நடத்திய பயங்கரவாத துப்பாக்கிச் சூட்டில் 22 அப்பாவி சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டனர்.

இதற்கு பதிலடி கொடுக்கும் நோக்கில் பாகிஸ்தானுக்கு எதிராக ஒபரேஷன் சிந்தூர் எனும் இராணுவ நடவடிக்கையை எடுத்தது. மே 7ஆம் திகதி தொடங்கிய இந்த நடவடிக்கை மே 10 ஆம் திகதி முடிவுக்கு வந்தது.

# பங்களாதேஷில் மேலுமொரு இந்து இளைஞர் படுகொலை

## பா.ஜ.க. கண்டனம்



பங்களாதேஷில் மேலும் ஒரு இந்து இளைஞர் கொல்லப்பட்டுள்ளார். இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள பா.ஜ.க, இந்துக்களை துன்புறுத்துபவர்களை பங்களாதேஷ் இடைக்கால அரசாங்கம் கட்டுப்படுத்தவில்லை என குற்றம் சாட்டியுள்ளது.

பங்களாதேஷின் ஃபெனி மாவட்டத்தின் தகன்புயான் பகுதியைச் சேர்ந்த ஷோமிர் குமார் தாஸ் என்ற இளைஞர், கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு வீட்டில் இருந்து தனது ஆட்டோவில் வெளியே சென்றுள்ளார். அவர் வீடு திரும்பாத நிலையில், திங்கள் கிழமை அதிகாலை 2 மணிக்கு அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய ஃபெனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஷபிகுல் இஸ்லாம்,

"ஷோமிர் குமார் தாஸ் ஞாயிற்றுக் கிழமை இரவு 8 மணிக்கு மேல் தனது ஆட்டோவில் வெளியே சென்றுள்ளார். அதன் பிறகு அவரைப் பற்றி எந்த தகவலும் இல்லை. அதிகாலை 2 மணிக்குப் பின்னரே அவரது உடல் கண்டுபிடிக்கப்பட்டது.

தகவல் கிடைத்ததும் பொலிஸ் சம்பவ இடத்துக்குச் சென்று உடலை மீட்டு தேவையான சட்ட நடைமுறைகளை மேற்கொண்டது. இது தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கொலை குறித்த எந்த துப்பும் இதுவரை எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால், யாரையும் கைது செய்யவும் முடியவில்லை. அதேநேரத்தில், நாங்கள் தொடர்ந்து விசாரணையை மேற்கொண்டு வருகிறோம்" என்று தெரிவித்தார்.

பங்களாதேஷில் மேலும் ஒரு இந்து இளைஞர் கொல்லப்பட்டதற்கு பா,ஜ,க, கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் தகவல் தொழில்நுட்பத் துறை பொறுப்பாளர் அமித் மால்வியா வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"பங்களாதேஷில் இந்து சமூகத்தின் மீது நடத்தப்பட்ட மற்றொரு குறிவைக்கப்பட்ட தாக்குதலில் 28 வயதான ஷோமீர் குமார் தாஸ், ஜனவரி 11 அன்று ஃபெனி மாவட்டத்தின் தாகன்புயானில் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்தியவர்கள், அவரது வாழ்வாதாரத்தின் ஒரே ஆதாரமாக இருந்த ஆட்டோவையும் கொள்ளையடித்துள்ளனர்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத முகம்மது யூனுஸ் ஆட்சி வந்ததில் இருந்து விரக்தியின் விளம்புக்குத் தள்ளப்பட்டுள்ள வங்கதேச இந்துக்கள் மீதான இடைவிடாத துன்புறுத்தலை இந்த கொலை உணர்த்துகிறது. இடைக்கால அரசாங்கம், இந்துக்கள், கிறிஸ்தவர்கள், பவுத்தர்கள் உள்ளிட்ட மத சிறுபான்மையினரைத் துன்புறுத்துபவர்களைக் கட்டுப்படுத்த எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. ஆறுதல் வார்த்தைகூட கூறுவதில்லை. மாறாக, தலைமைப் பொறுப்பில் இருப்பவர், இந்த குறிவைத்து நடக்கும் தாக்குதல்களை கற்பனை என்று நிராகரிக்கிறார்.

இந்த செய்தி அச்சமூட்டுவதாக உள்ளது. சிறுபான்மையினரின் உயிர்களுக்கு மதிப்பு இல்லை. 2026ஆல் மம்தா பானர்ஜி மீண்டும் ஆட்சிக்கு வந்தால், மேற்கு வங்கத்திலும் இந்துக்களின் நிலைமை மோசமடையும்.

எனவே, மேற்கு வங்கத்தில் உள்ள வங்க மக்கள் எந்தவித மாயைகளுக்கும் ஆளாகக் கூடாது. ஹொர்கோபிந்தோ தாஸ் மற்றும் அவரது மகன் சந்தன் தாஸ் ஆகியோரின் ரத்தக் கறைகள் இன்னும் காயக்கூடவில்லை. ஒருபோதும் மறக்காதீர்கள், ஒருபோதும் மன்னிக்காதீர்கள்." என தெரிவித்துள்ளார்.



# ஈரான் மீது இராணுவ நடவடிக்கை; டொனால்ட் ட்ரம்ப் ஆலோசனை

## அமெரிக்கர்களை உடனடியாக வெளியேறுமாறு கோரிக்கை

ஈரானில் அரசுக்கு எதிரான போராட்டங்களில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கான இராணுவ மற்றும் உளவுத்துறை சார்ந்த பல்வேறு திட்டங்கள் குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பெண்டகன் அதிகாரிகள் மற்றும் அமெரிக்கப் பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் வெளியிட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், ஈரான் மீதான தலையீட்டிற்கு அமெரிக்கா பல வழிகளைத் தயார் நிலையில் வைத்துள்ளது.

நீண்ட தூர ஏவுகணைகள் மூலம் இலக்குகளைத் தாக்குதல். ஈரானின் கட்டளை மையங்கள் மற்றும் தகவல் தொடர்பு கட்டமைப்புகளைச் சிதைக்க வான்வழித் தாக்குதல்களைப் பயன்படுத்துதல். ஈரானின் தகவல் தொடர்பு மற்றும் இராணுவக் கட்டமைப்பை முடக்க சைபர் தாக்குதல்களை முன்னெடுத்தல் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கக் குடிமக்கள் உடனடியாக ஈரானை விட்டு வெளியேறுமாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர். தேவைப்பட்டால் இராணுவத்தைப் பயன்படுத்த ட்ரம்ப் அஞ்சமாட்டார் என வெள்ளை மாளிகை ஊடகச் செயலாளர் கரோலின் லெவிட் எச்சரித்துள்ளார்.

ஈரான் தலைவர்கள் தனிப்பட்ட முறையில் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகத் வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், பகிரங்கமாக ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி அமெரிக்காவைச் சாடி வருகிறார்.

ஈரான் பேச்சுவார்த்தைக்குத் தயார், அதேநேரம் போருக்கும் தயார் என ஈரான் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஈரானின் உச்ச தலைவர் அலி கமேனி, அமெரிக்காவை வஞ்சகமானது என்றும் போராட்டக்காரர்களை துரோகிகள் என்றும் சாடியுள்ளார்.

அமெரிக்காவில் தஞ்சமடைந்துள்ள ஈரானின் கடைசி மன்னரின் மகனான ரெஸா பஹ்லவி,

“ஈரான் அரசு உலகை ஏமாற்றப் பார்க்கிறது. அதிகப்படியான உயிரிழப்புகளைத் தடுக்க ஜனாதிபதி ட்ரம்ப் விரைவில் ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, ஈரானுடன் வர்த்தகத் தொடர்பில் உள்ள நாடுகள் மீது 25 வீத இறக்குமதி வரி விதிக்கப்படும் என்று ட்ரம்ப் அதிரடியாக அறிவித்துள்ளார்.

ஈரானின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளிகளான சீனா, ஈராக், ஐக்கிய அரபு அமீரகம், துருக்கி மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இது பெரும் அழுத்தத்தைக் கொடுக்கும் எனக் கருதப்படுகிறது.

ஏற்கனவே ஈரானில் உணவுப் பொருள்களின் விலை 70 வீத வரை உயர்ந்துள்ள நிலையில், இந்த நடவடிக்கை அந்நாட்டின் பொருளாதாரத்தை மேலும் நிலைகுலையச் செய்யும்.

மனித உரிமை அமைப்புகளின் தகவல் படி குறைந்தது 648 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால், ஈரானுக்குள்ளிருந்து வரும் தகவல்கள் இந்த எண்ணிக்கை 6,000 இற்கும் அதிகமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கின்றன.

ஈரானில் நிலவும் இணையத் துண்டிப்புக் காரணமாக உண்மையான நிலவரங்களைக் கண்டறிவதில் சர்வதேச ஊடகங்களுக்குச் சிக்கல் நீடிக்கிறது.

எனினும், ஆங்காங்கே போராட்டங்கள் தொடர்வதை உறுதிப்படுத்தும் காணொலிகள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

# தென் கொரிய முன்னாள் ஜனாதிபதிக்கு மரண தண்டனை விதிக்குமாறு கோரிக்கை

தென் கொரிய முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோலுக்கு மரண தண்டனை விதிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென் கொரிய அரசு சட்டத்தரணிகளால் அந்த நாட்டு நீதிமன்றத்தில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதிகார துஷ்பிரயோகம், தேசத் துரோகம் மற்றும் ஜனநாயக அமைப்புகளைச் சீர்குலைக்க முயற்சித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் தென் கொரிய முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் மீது சுமத்தப்பட்டுள்ளன.

சர்வாதிகார ஆட்சியை நிலைநிறுத்த அவர் முயற்சித்ததாகவும் சட்டத்தரணிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வழக்கின் இறுதித் தீர்ப்பு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19 திகதி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.




பக்கங்கள் - 03

# கனடா முரசு

புதன்கிழமை | 14/01/2026

## சீனா பயணமாகிறார் கனடா பிரதமர் கார்னி



C3



# 4,000 உணவகங்கள் மூடப்படும் நிலை; வேலையிழக்கும் அபாயத்தில் தமிழர்கள்

கனடாவில் இந்த ஆண்டு மட்டும் 4,000 வரையிலான உணவகங்கள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் தமிழர்கள் உட்பட பல வெளிநாட்டவர்களுக்கு வேலையிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சமகாலத்தில் பல உணவகங்கள் தங்கள் வர்த்தகத்தை முன்னோக்கி கொண்டு செல்வ-தில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதால் உணவகங்கள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

C2

# தாக்குதல் சம்பவம் தொடர்பில் நடிகர் கீஃபர் சதர்லாந்து கைது

கனடிய நடிகர் கீஃபர் சதர்லாந்து, பயணிகள் போக்குவரத்து சேவை (ரைட்–ஹெயில்) ஓட்டுநருடன் ஏற்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக லொஸ் ஏஞ்சல்ஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹாலிவுட் ஹில்ஸ் பகுதியின் தெற்கே உள்ள சன்செட் புலவர்ட் – ஃபேர்ஃபாக்ஸ் அவென்யூ சந்திப்புக்கு அருகில் தாக்குதல் சம்பவம் நடந்ததாக தகவல் கிடைத்ததையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்றுள்ளனர்.

லொஸ் ஏஞ்சல்ஸ் போலீஸ் துறை வெளியிட்ட அறிக்கையில், 59 வயதான கீஃபர் சதர்லாந்து ஒரு ரைட்–ஹெயில் வாகனத்தில் ஏறிய பின்னர் ஓட்டுநரை தாக்கினார் என்றும் மிரட்டினார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும், அந்த ஓட்டுநருக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும் அளவுக்கு காயங்கள் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குற்றவியல் மிரட்டல் குற்றச்சாட்டின் அடிப்படையில் சதர்லாந்து கைது செய்யப்பட்டார் எனவும் பின்னர் 50,000 அமெரிக்க டொலர் பிணையில் சில மணி நேரங்களுக்குப் பிறகு அவர் விடுவிக்கப்பட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரபலமான திரில்லர் தொடர் ‘24’ இல் ஜாக் பவுர் கதாபாத்திரத்தை நீண்ட காலமாக நடித்ததன் மூலம் கீஃபர் சதர்லாந்து உலகப் புகழ் பெற்றார்.


மேலும் ‘தி லாஸ்ட் பாய்ஸ்’, ‘யங் கன்ஸ்’ உள்ளிட்ட திரைப்படங்களிலும்,



இயக்குநர் ராப் ரெய்னர் இயக்கிய ‘ஸ்டாண்ட் பை மீ’, ‘அ ஃப்யூ குட் மேன்’ ஆகிய படங்களிலும் நடித்துள்ளார்.

அவர் ஹாலிவுட் திரையுலகின் புகழ்பெற்ற நடிகர் டொனால்ட் சதர்லாந்தின் மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சீனா பயணமாகிறார் கனடா பிரதமர் கார்னி



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் வர்த்தகப் போர் மற்றும் நாடுகளைக் கைப்பற்றும் அச்சுறுத்தல் ஆகியவற்றால் அமெரிக்கா, கனடா உறவில் சற்று விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், கனடா பிரதமர் மார்க் கார்னி சீனாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். சீனா செல்லும் கார்னி எதிர் வரும் 16 ஆம் திகதி அந்த நாட்டு ஜனாதிபதி ஜி ஜின்பிங்கைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதுதொடர்பாக மார்க் கார்னி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“உலகளாவிய வர்த்தகக் குழப்பம் நிலவும் இந்த நேரத்தில் கனடா ஒரு போட்டித்தன்மை வாய்ந்த, நிலையான மற்றும் சுதந்திரமான பொருளாதாரத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது.

ஒரே வர்த்தகப் பங்காளியைச் சார்ந்திருந்த நமது பொருளாதாரத்தை மாற்றுவதற்காக நாங்கள் உலகம் முழுவதும் புதிய கூட்டாண்மைகளை உருவாக்கி வருகிறோம்.” என குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் தென் கொரியாவில் நடந்த ஆசியா–பசிபிக் பொருளியல் ஒத்துழைப்பு மாநாட்டில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை மார்க் கார்னி சந்தித்தார்.

அப்போது சீனா வருமாறு அவர் விடுத்த அழைப்பை ஏற்று அங்கு செல்ல கார்னி ஒப்புக் கொண்டார்.

கனடா பிரதமரின் சீன பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப் படுகிறது.

# கனடாவில் நாடு தழுவிய ரீதியில் மீளப்பெறப்படும் மாட்டிறைச்சி ‘பர்கர்கள்’




கனடாவில் நாடு தழுவிய ரீதியில் சந்தைகளிலிருந்து மாட்டிறைச்சி ‘பர்கர்கள்’ திரும்பப் பெறப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய உணவு ஆய்வு நிறுவனம் ஈகொலி பாக்டீரியா தொற்று இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் காரணமாக ‘ழெ யெஅந’ (நோ நேம்) பிராண்டு மாட்டிறைச்சி ‘பர்கர்களை’ நாடு முழுவதும் உடனடியாக மீளப் பெறுமாறு உத்தரவிட்டுள்ளது.

கடந்த திங்கள் கிழமை வெளியிட்ட செய்தி அறிக்கையில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உணவை பொதுமக்கள் சாப்பிடவும், பயன்படுத்தவும், விற்கவும், பரிமாறவும் அல்லது விநியோகிக்கவும் கூடாது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

உணவு பாதுகாப்பு தொடர்பான விசாரணை தற்போது நடைபெற்று வருவதாகவும், அதன் அடிப்படையில் மேலும் பல உணவுகளை மீளப்பெறும் அறிவிப்பு வெளியிடப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை, இந்த உணவை உட்கொண்டதால் நோய் ஏற்பட்டதாக எந்த தகவலும் பதிவாகவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பாக்டீரியா தொற்றிய உணவுகள் பார்ப்பதற்கு அல்லது மணத்திற்குப் பழுதடைந்ததாக தெரியாமல் இருக்கலாம்.

ஆனால் அவற்றை உண்டால் கடுமையான உடல்நல பாதிப்புகள் ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## 4,000 உணவகங்கள்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்களுக்கான சம்பளம், காப்புறுதி மற்றும் வாடகை ஆகியவற்றுக்காக உணவக உரிமையாளர்கள் செலவழிக்கும் தொகை சடுதியாக அதிகரித்துள்ளது.

கனடாவில் வாழ்க்கை செலவு அதிகரித்துள்ள நிலையில், உணவகங்களுக்கு செல்லும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையிலும் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இதன் காரணமாக உணவகங்கள் அதன் செலவுகளை ஈடுகட்ட முடியாமல் திணறி வருவதாக அதன் உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இதேவேளை, மதுபான விற்பனை குறைந்து வருவதும் மற்றுமொரு பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது.

முன்பு மதுபான விற்பனை உணவகங்களுக்கு அதிக இலாபத்தை ஈட்டி தந்ததால் செலவுகளை ஈடுகட்ட முடியுமாக இருந்தது. ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்காகவும் வீண் செலவுகளை தவிர்ப்பதற்காகவும் மக்கள் இப்போது குறைவாகவே மதுபானம் அருந்துகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

இதனால், உணவகங்கள் ஒரு முக்கியமான வருமான ஆதாரத்தை இழக்கின்றன. இந்நிலையில், உள்ளூர் சமூகங்களுக்கு தனித்துவமான உணவுகளை வழங்கும் சிறு உணவகங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

அதேவேளை, கனடாவில் அதிகளவான தமிழர்கள் உணவகங்களில் பணியாற்றி வருகின்ற நிலையில் அவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறிகுள்ளாகி யுள்ளது.





# இந்திய வம்சாவளி இளைஞர் கனடாவில் சுட்டுக் கொலை

கனடாவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பஞ்சாபி இளைஞர் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் அபோட்ஸ்ஃபோர்ட் நகரத்தில், பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த இளைஞர் அவரது குடும்பத்துடன் வசித்து வந்தார்.

இந்த நிலையில், கடந்த 9 ஆம் திகதி அந்த இளைஞனை அவரது வீட்டில் அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பியோடியுள்ளனர் என கூறப்படுகிறது. படுகாயமடைந்த இளைஞனை மீட்டு பொலிஸ் அதிகாரிகள் மருத்துவமனையில் அனுமதித்த போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தக் கொலை வழக்கில் இதுவரை யாரும் கைது செய்யப்படாத நிலையில் கனடாவின் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதையடுத்து, பிரபல குற்றவாளிக் குழுவின் தலைவரான ஒருவர் கொலைக்குப் பொறுப்பேற்றுள்ளார் என கூறப்படுகிறது.

முன்னதாக, கொலை செய்யப்பட்ட பஞ்சாபி இளைஞரின் குடும்பத்தினர் கடந்த 1995 ஆம் ஆண்டு கனடாவுக்கு புலம்பெயர்ந்துள்ளனர்.

மேற்படி இளைஞன் போதைப் பொருள் மற்றும் ஆயுதக் கடத்தல் வழக்குகளில் தொடர்புடையவர் என்பது குறிப்பிடத்தக்கது.




# சக்திவாய்ந்த கடவுச்சீட்டுகள் பட்டியல்: 8 ஆவது இடத்தைப்பிடித்தது கனடா

விசா தடையின்றி பல நாடுகளுக்குப் பயணம் செய்யும் வசதி மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டில் குறைந்த தாமதம் ஆகியவற்றில், சில நாடுகளின் கடவுச்சீட்டுகள் உலகளவில் அதிக சக்தி பெற்றவையாக உள்ளன.

ஹெலன்லி எண்ட் பார்ட்னர்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள Henley Passport Index (கடவுச்சீட்டு குறியீடு) அறிக்கையின் படி, கனடா உலகின் 8 ஆவது சக்திவாய்ந்த கடவுச்சீட்டைக் கொண்ட நாடாக இடம்பிடித்துள்ளது.

இந்த பட்டியலில், கனடா 181 நாடுகள் மற்றும் பிரதேசங்களுக்கு விசா இன்றிய அல்லது வருகை விசா அனுமதியுடன் பயணம் செய்யக்கூடியதாக உள்ளது.

இதன் மூலம், கனடா 8 ஆவது இடத்தை ஐஸ்லாந்து மற்றும் லிதுவேனியாவுடன் பகிர்ந்து கொண்டுள்ளது.

கனடிய கடவுச்சீட்டு, உலகளவில் பயண சுதந்திரம், நம்பகத்தன்மை மற்றும் சர்வதேச அங்கீகாரம் ஆகியவற்றில் தொடர்ந்து வலுவானதாக இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த பட்டியலில் சிங்கப்பூர் முதல் இடத்தையும், ஜப்பான், தென் கொரியா ஆகியன இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளன.

அறிக்கையின் படி, அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் கடந்த ஆண்டில் அதிக சரிவை சந்தித்த நாடுகளாக உள்ளன.

அமெரிக்கா தற்போது 10 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ள நிலையில், கடந்த 12 மாதங்களில் 7 நாடுகளுக்கான விசா இல்லா அனுமதியை இழந்துள்ளது.

ஐக்கிய இராச்சியம் 8 நாடுகளுக்கான அனுமதியை இழந்து, வருடாந்த அடிப்படையில் மிகப் பெரிய வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.